*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*01 11 2025 SATURDAY 7.15 PM*
*ஆகாஷவாணி*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

- *நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாத்து, வளர்ச்சிப்பாதையில் இந்தியா முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

- *தொழிலாளர்களின் சமூக மற்றும் நிதிசார் நலனில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.*

- *ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் ஸ்ரீ வெங்கடேஷ்வர சுவாமி திருக்கோவிலில் இன்று நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர்.*

- *கனடாவின் இறக்குமதி பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரியை கண்டித்து வெளியிடப்பட்ட அரசியல் விளம்பரத்தை திரும்பப்பெறுவதாக அந்நாட்டு பிரதமர் திரு Mark Carney உறுதியளித்துள்ளார்.*

- *உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<<>>>>>>*

*நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாத்து, வளர்ச்சிப்பாதையில் இந்தியா முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*சத்தீஸ்கர் மாநிலம் நவா ராய்ப்பூரில் புதிய சட்டப்பேரவைக் கட்டிடத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், மத்திய அரசின் ஒவ்வொரு திட்டங்களும் இந்த கொள்கையை பின்பற்றுவதாக கூறினார்.*

*சத்தீஸ்கர் சட்டப்பேரவையின் புதிய கட்டிடத்தில் அம்மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதாக அவர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியின்போது, முன்னாள் பிரதமர் பாரத் ரத்னா அடல் பிகார் வாஜ்பேயின் திருவுருவச் சிலையை பிரதமர் திறந்துவைத்தார்.*

*பின்னர், ராய்பூரில் சத்தீஸ்கர் மாநிலத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டங்களில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் அனைத்துப்பகுதிகளில் இருந்தும் நக்சல் தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.*

*நக்சல் தீவிரவாதம் மூலம் சத்தீஸ்கரின் பல்வேறு பகுதிகளில் சாலை, பள்ளி, மருத்துவமனை வசதிகள் போதிய அளவு இல்லாத நிலைமை உருவானதாகவும், தற்போது அரசு திட்டங்கள் மூலம் இப்பகுதிகள் மேம்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*இந்நிகழ்ச்சியில், 14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய பிரதமர் முடிவுற்றத் திட்டப்பணிகளையும் தொடங்கிவைத்தார்.*

*பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், மூன்றரை லட்சம் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை திரு நரேந்திர மோடி வழங்கினார்.*

*<<<<<>>>>>>*

*தொழிலாளர்களின் சமூக மற்றும் நிதிசார் நலனில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியத்தின் 73-ஆவது நிறுவன நாள் விழாவில் இன்று உரையாற்றிய அவர், நமது நாட்டின் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை இது உறுதி செய்வதாக தெரிவித்தார்.*

*வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் தொழிலாளர்கள் தாமாக முன்வந்து சேருவதற்கான புதிய திட்டத்தையும் டாக்டர் மன்சுக் மாண்டவியா தொடங்கிவைத்தார்.*

*<<<<<>>>>>>*

*பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது.*

*கோபால்கஞ்சில் காணொலி மூலம் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, மத்திய – மாநில அரசுகள் விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் நடவடிக்கைகள் மூலம் பீகாரில் மூடப்பட்ட பல்வேறு சர்க்கரை ஆலைகள் மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*Begusarai -யில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, அம்மாநிலத்தில் சிறு வணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறை கூறினார்.*

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணிக்காக சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளர் திரு தேஜஷ்வி யாதவ் உள்ளிட்டோர் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

<<<<<>>>>>>

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் *Kashabugga*-வில் உள்ள ஸ்ரீ வெங்கடேஷ்வர சுவாமி திருக்கோவிலில் இன்று நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

இந்த உயிரிழப்பு சம்பவம் தமக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

மேகாலயாவில் 200 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த சுற்றுலா திட்டத்திற்கு மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியாவும், அம்மாநில முதலமைச்சர் திரு *Conrad Sangma* -வும் அடிக்கல் நாட்டினர்.

பிரதமரின் வடகிழக்கு பிராந்திய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், செயல்படுத்தப்படும் இந்த திட்டம் மூலம், அப்பகுதியில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, சுற்றுலா வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

<<<<<>>>>>>

இந்திய கடற்படை பணியாளர்களின் தலைமை தளபதியாக வைஸ் அட்மிரல் குர்சரண் சிங் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

*கடற்படையில் 1990-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த அவர், கோவா கடற்படை கல்லூரியின் துணை தளபதி உள்ளிட்ட பல்வேறு பதவிகளை அவர் வகித்துள்ளார்.*

*<<<<<>>>>>>*

*தில்லி Moga விரைவு ரயில் பஞ்சாபின் Ferozpur கண்டோன்மன்ட் ரயில் நிலையம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே இணையமைச்சர் திரு Ravneeth Singh Bittu தெரிவித்துள்ளார்.*

*சமூக வலைளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பஞ்சாப் மாநிலத்தில் ரயில் கட்டமைப்பு வசதியை வலுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவுக்கும் நன்றி தெரிவிப்பதாக திரு Ravneeth Singh Bittu கூறியுள்ளார்.*

*<<<<<>>>>>>*

*மத்திய அரசின் திறன் இந்தியா திட்டத்தின்கீழ், பல்வேறு பயிற்சிகள் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.*

*தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் இந்த திட்டத்தின்கீழ், பயிற்சி பெற்று சுயதொழில் தொடங்கியுள்ளதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.*

*(Voice Byte – கண்ணன் - 44 Sec. )*

*<<<<<>>>>>>*

*கென்யாவில் மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் 13 பேர் உயிரிழந்தனர்.*

*அந்நாட்டின் மேற்கு பள்ளத்தாக்கில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் காணாமல் போன மேலும் 19 பேரை தேடும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.*

*மீட்புப்பணிகள் நடைபெற்றுவருவதாக கென்யா உள்துறை அமைச்சர் Murkomen தெரிவித்துள்ளார்.*

*<<<<<>>>>>>*

*கனடாவின் இறக்குமதி பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரியை கண்டித்து வெளியிடப்பட்ட அரசியல் விளம்பரத்தை திரும்பப்பெறுவதாக அந்நாட்டு பிரதமர் திரு Mark Carney உறுதியளித்துள்ளார்.*

தென்கொரியாவில் ஆசியா பசிபிக் உச்சிமாநாட்டின்போது செய்தியாளர்களிடம் பேசிய திரு Mark Carney, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்பை சந்தித்து வருத்தம் தெரிவித்ததாக கூறினார்.

முன்னதாக, கனடா விளம்பரம் வெளியிட்டதையடுத்து, இருநாடுகளுக்கு இடையேயான அனைத்து வர்த்தக பேச்சுவார்த்தையை நிறுத்திவைக்க அமெரிக்க அதிபர் உத்தரவிட்டிருந்தார்.

மேலும், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதலாக பத்து சதவீதம் வரி விதிக்கவும் உத்தரவிட்டிருந்தார்.

<<<<<>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டின் Al Ain-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு 50 மீட்டர் பிரிவில் ஆகாஷ் தங்கப்பதக்கத்தையும், சந்தீப்குமார் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

--------------

இந்திய டென்னிஸ் வீரர் ரோஹன் போபண்ணா சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

டென்னிஸ் உலகின் இரட்டையர் பிரிவில் தலைசிறந்து விளங்கிய ரோஹன் போபண்ணா, ஆஸ்திரேலியா ஓபன் இரட்டையர் பிரிவு மற்றும் பிரெஞ்ச் ஓபன் கலப்பு இரட்டையர் பிரிவு என இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

கடந்த ஆண்டு இரட்டையர் பிரிவில் உலகத்தரவரிசை பட்டியலில் ரோஹன் போபண்ணா முதலிடம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

--------

தென்னாப்பிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா ஏ அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 119 ரன் எடுத்துள்ளது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இந்தியா ஏ அணி வெற்றி பெற 275 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*தென்னாப்பிரிக்க ஏ அணி முதல் இன்னிங்ஸில் 309 ரன்னும், இரண்டாவது இன்னிங்சில 199 ரன்னும் எடுத்துள்ளது.*

*இந்தியா ஏ அணி முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 234 ரன்*

-------------

*கோயம்புத்தூரில் விதர்பா அணிக்கு எதிராக நடைபெற்றுவரும் ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல்நாள் ஆட்டநேர இறுதியில் தமிழகம் அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 252 ரன் எடுத்துள்ளது*

*தமிழக அணியின் பாபா இந்திரஜித் 94 ரன்னுடன் களத்தில் உள்ளார்.*

*<<<<<END>>>>>>*